சவாரிகொட்டை கிழங்கு உற்பத்தி

* 21 வினா—**திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1972-73-ம் ஆண்டில் சவாரிகொட்டை கிழங்கு தமிழகத்தில் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டது ?

(இ) அதில் ஏற்றுமதி செய்யப்பட்டது எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) 11, 41, 320 (பதினொரு லட்சத்து நாற்பத்து ஓராயிரத்து முன்னூற்று இருபது) டன்கள்.

(இ) பூஜ்யம்.

Prices of eatables in Hotels

*** 22 Q.—**THIRU N. K. PALANISWAMY :

THIRU K. A. WAHAB :

THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the steps taken by the Government to reduce price of the eatables in hotels in the City of Madras?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலைகள் அதிகமாகும் நேரங்களில் அரசு, ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்துடன் தொடர்பு கொண்டு விலைகளைக் குறைக்குமாறு வலியுறுத்தி வருகிறது. அண்மையில் பருப்பு, எண்ணெய் முதலிய பண்டங்களின் விலையேற்றத்தைக் காரணமாகக் கொண்டு, ஓட்டல் உரிமையாளர்கள் உணவுப் பண்டங்களின் விலையைக் கூடுதலாக்கிவிட்டனர். கோதுமை, ரவை, மைதா போன்ற பண்டங்கள் கட்டுப்படுத்திய விலையில் ஓட்டல்களுக்கு வழங்கப் படுவதால் உப்புமா, பூரி இவற்றின் விலையேற்றம் நியாயமற்றதாகக் கருதப்பட்டது. ஓட்டல் உரிமையாளர்களுடன் 5—3—1973 அன்றும், 9—8—1973 அன்றும் பேச்சு வார்த்தைகள் நடத்தியதின் விளைவாக இட்லி, உப்புமா, பூரி, மெதுவடை ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுவிட்டன. அண்மையில் பருப்பு

1974 சனவரி 19]

வகைகள், எண்ணெய் வகைகள் விலைகள் கூடிவிட்டபடியால், ஓட்டல்களில் உணவு பண்டங்களின் விலைகள் சற்றேறக்குறைய 5 பைசா அளவில் கூடிவிட்டன.

மாவட்டங்களில், ஓட்டல் உரிமையாளர்களுடன் கலந்து பேசி விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

திரு. என். கே. பழனிசாமி: சார், கனம் மந்திரியவர்கள் சொல்லும்பொழுது இட்லி விலை குறைந்திருப்பதாகச் சொன்னார்கள். அது எந்தக் கடையில் என்று தெரியவில்லை. 20 காசு விற்ற இட்லி இப்பொழுது 25 காசு என்று விற்கிறது. 25 பைசாவாக இருந்த தோசை 40 பைசா என்று விற்கிறது. விலை குறைவு என்று சொல்வதைவிட இட்லியின் அளவு குறைந்திருக்கிறது என்று சொல்லலாம். ஆகவே, இட்லியைக் கொண்டு வந்து வைத்தவுடனே காற்றில் பறந்துவிடும் என்பதற்காக சாம்பாரை ஊற்றித்தான் கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைப் போடுங்கள்.

திரு. என். கே. பழனிசாமி: தோசையைக் கொண்டு வந்து வைப்பதற்கு முன்னால் இரண்டு டம்ளர் தண்ணீரைக் கொண்டு வந்து வைத்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. விலையும் அதிகமாக இருக்கிறது. உளுந்து போன்றவற்றின் விலைகள் குறைந்திருக்கின்றன. முன்பு ஏறியிருந்த விலையை விட அரிசியின் விலையும் கூட குறைந்திருக்கிறது. ஆகவே பெருவாரியான ஜனங்கள் ஹோட்டல்களை நம்பியிருப்பதால் இதுகுறித்து சர்க்கார் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அரிசி, உளுந்து விலை இறங்கியிருக்கிறது என்று சொன்னதற்காக நன்றி சொல்கிறேன். நான் சொன்ன விலை ஹாஸ்டல் ஹோட்டலிலே வடை 15 பைசா. ஆனால் எம்.எல்.ஏ. அவர்கள் அதை வாங்கிச் சாப்பிடாமல் பெரிய ஹோட்டலுக்குச் செல்கிறார் என்று கருதுகிறேன். கடைசியிலே படிக்கும்பொழுது சொல்லியிருக்கிறேன். பருப்பு விலை அதிகமாகி இருப்பதால் சில பண்டங்களின் விலைகளை ஏற்றியிருக்கிறார்கள் என்று சொன்னேன். மீண்டும் கூடிப் பேச ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம்.